1968 ஆகஸ்ட் 24]

(*b*) whether this special allowance was stopped immediately after the present Government assumed office ; and

(*c*) whether the Government have decided to recover the amount that had been paid as special allowance from the personnel belonging to the Police Department at the rate of Rs. 11 per month ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

மூடப்பட்ட கோவை ஆலைத் தொழிலாளர் வெளி மாநிலங்களுக்குச் சென்றதும் தாக்கப்பட்டு திரும்பியதும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. என். குமாரசாமி அவர்கள் "அண்மையில் கோவை பகுதியில் இருந்து சென்ற மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் வெளி மாநிலங்களில், வேலைக்காகச் சென்று தாக்கப்பட்டு, உடைமைகள் கைப்பற்றப்பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகின்றனர்" என்ற அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கவேண்டுமென்று பேரவையின் விதி 42-ன் கீழ் ஓர் அறிவிக்கை கொடுத்திருக்கிறார். இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. மேலும் மூடப்பட்ட ஆலைகளின் பிரச்சினைபற்றி இங்கே விவாதிப்பது முறையற்றது. எனவே, இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளித்தார். இது முக்கியமான பிரச்சினையாக இருந்தும், மூலக்கேள்வி போட்ட எனக்கு ஒரு துணைக்கேள்வி போடுவதற்கு தாங்கள் அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. உறுப்பினர்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருந்து எதை வேண்டுமானாலும் பேசுவது கூடாது என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து எதை வேண்டுமானாலும் சொல்வதற்கு இந்தச் சபை இடம் கொடுக்காது.

3. தகவல் கோரல்

விநாயக சதுர்த்திக்கு விடுமுறை

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir, Tuesday happens to be the birthday of Lord Vinayaka. That day used to be generally declared a holiday under the Negotiable Instruments Act. Is it going to be done now or is the Government going to declare all offices closed ? Even if the Government does not close down all offices on that day, what about this House ? Are we going to sit on that day ? What is your decision, Sir ? I believe the Hon. Chairman of the Legislative Council has declared a holiday for the Council for that day. If we have a sitting in the evening of that day, they want to have a holiday. We are mostly